# Women's Games in Thiruvasagam – An Overview

**Mrs. M. Arulambigai**
*Assistant Professor, Department of Tamil*
*S.S.K.V. College of Arts and Science for Women, Kanchipuram*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17346744

**Abstract**
*From the Sangam period onward, the games played by women have held a distinct cultural significance. Tamil literature—from the Sangam poems to modern writings—has continuously reflected references to women's games. These games, often linked to emotional and psychological aspects, occupy an important place in social life. During the Bhakti movement, women's games were not merely forms of recreation but became symbolic of religious and cultural growth, serving as expressions of devotion toward God. Both Saiva and Vaishnava literatures contain numerous depictions of women's games intertwined with religious ideas. In this context, the games played by women as portrayed in Thiruvasagam reveal deep spiritual and devotional meanings, highlighting the devotion and piety of women in Tamil religious tradition.*

**Reference Books**

1. Tholkappiyam
2. Thiruvasagam
3. Kurinjikkali

# திருவாசகத்தில் மகளிர் விளையாட்டுகள்–ஒரு பார்வை

***திருமதி ம. அருளாம்பிகை***
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை
எஸ்.எஸ்.கே.வி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி. காஞ்சிபுரம்

***ஆய்வுச் சுருக்கம்***
*சங்ககாலம் முதற்கொண்டு மகளிர்விளையாடும் விளையாட்டுகள் தனிச்சிறப்புடைய வனவாக திகழ்கின்றன. சங்கப் பாடல்கள் முதற்கொண்டு இன்று வரை மகளிர்விளையாட்டுகளகளை உள்ளடக்கிய பாடல்கள் எழுந்த வண்ணம் உள்ளன. மகளிர் விளையாட்டுகள் உளவியலை சார்ந்துள்ளதால் சமூகத்தில் முக்கியத்து வாய்ந்த ஒன்றாக உள்ளது. பக்தி இயக்க காலத்தில் மகளிர்விளையாட்டு சமய பண்பாட்டு வளர்ச்சியின் குறியீடாகவும் இறைவன் மீது பக்தி செலுத்து வதற்கு தூண்டு கோலாகவும் கட்டமைக்கப்பட்டுள்ளது. சைவ வைணவ இலக்கியங்களில் சமயத் தொடர்போடு கூடிய மகளிர்விளையாட்டுகள் பல காணப்படுகின்றன. அந்த வகையில் திருவாசகத்தில் மகளிர்விளையாடும் விளையாட்டுகள் சமயச் சிந்தனைகளை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன. மகளிர்பக்தியில் சிறந்தவர்களாக விளங்கியமையும் புலப்படுகிறது.*

***முன்னுரை***

*சைவசமய நூலான திருவாசகத்தில் மகளர் விளையாடும் விளையாட்டுகள் பல உள்ளன. அவைமேம் போக்காக மகளிர் பெழுது போக்கிற்காக விளையாடும் விளையாட்டுகளாக காணப்படினும் ஆழ்ந்த பொருளாக மகளிரின் பக்தி நிலைகள் தத்துவச் சிந்தனைகள் புராணக் கருத்துகள் முதலியவை உள்ளாந்த கருத்துகளாகப் புலப்படுகின்றன. பக்தி இயக்க வளர்ச்சிக்கு பெண்களின்பங்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதும் இலக்கியங்களின் வழி எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளன என்பதையும் இக்கட்டுரையில் காண்போம்.*

***பண்டைய கால மகளிர்விளையாட்டுகள்***

*பழங்காலம் முதலே மகளிர் விளையாட்டுகள் இலக்கியங்களில் காணப் படுகின்றன.*

*சான்றாக தொல்காப்பியர் கெட வரல்.. பண்ணை ஆகிய விளையாட்டுக்களைக் குறிப்பிடுகிறார்.*

***"கூடியல் மருங்கின் ஆடியற் பெயர்"***
***(தொல்– பெய=ாியல்–11)***

*மகளிர் இரு குழுக்களாக பிரிந்து விளையாடும் போது .தங்கள் குழுக்களுக்கு புது பெயரை சூட்டிவிளையாடியுள்ளனர்.*

*சங்க மருவிய காலத்தில் ஓரை விளையாடியுள்ளனர். பக்தியியக்க காலத்தில் அம்மானை. கும்மி. பந்தாட்டம். பல்லாங்குழி. தட்டாங்கல் ஊசல் போன்ற விளையாட்டு களை ஆடியுள்ளனர்.*

*அக்கால மகளிர் விளையாட்டு இடங்களாக மன்றம். தெரு. மறைவிடம் குன்று. இளமரக்கா. பந்தல். பளிக்கறை. நீர்நிலை. நெடுமணல். பரப்பு. காவற்காடு. களம் போன்ற இடங்களில் விளையாடியுள்ளனர். ஏழு வயது முதல் பதினெட்டு வயது வரையுள்ள குமரியர்கள் இவ்விளையாட் டுகளை நிகழ்த்தியுள்ளனர். அம்மானை சிறுவயது பெண்ணும் வயது முதிர்ந்த பெண்களும் ஆடுகின்றனர். பதினைந்து வயதிற்கு மேற்பட்ட பெண்கள் சாழல். உந்தியார்விளையாடுகின்றனர்.*

### திருவாசகத்தில் மகளிர்விளையாடும் விளையாட்டுகள்

திருவாசகத்தில் மகளிர் ஆடும் விளையாட்டுகள்

திருத்தெள்ளேனம்
திருச்சாழல்
திருவெம்பாவை
திருப்பூவல்லி
திருவம்மானை
திருப்பொற்சுண்ணம்
திருக்கோத்தும்பி
திருவுந்தியார்
திருத்தோள் நோக்கம்
திருப்பொன்னூசல்

ஆகிய பதிகங்கள் மகளிர்ஆடி பாடிக் கொண்டு விளையாடும் விளையாட்டினூடே பக்தியை இணைத்திருப்பது அறிவு சார்ந்த கட்டமைப்பாக உள்ளது. இவ்விளையாட்டுகள் இயல்பான அன்றாட வாழ்க்கை முறையில் கடவுளை நினைப்பதற்கும் வழிப்படுவதற்குமான ஒரு சிறந்த நெறியாக அமைக்கப் பட்டுள்ளது.

### மகளிர்விளையாட்டும் திருவிளையாடலும்

திருவாசகத்தில் விளையாட்டுப் பாடல்களின் மூலம் சிவபெருமானின் திருவிளையாடல்கள் பேசப்படுகின்றன.

**"அருமருந்ததேவர் அயன்திருமாற் கரியசிவம்" (திருத்தெள்ளேணம்-5)**

**"அயனுந்திருமாலும், வானாடர் கோவும்.." (திருச்சாழல்-6)**

**"அரனார்அழலுருவாய் அங்கே அளவிறந்து" (திருதோணோக்கம்-12)**

முதலிய அடிகளில் மாணிக்கவாசகர் பிரம்மனும் திருமாலும் காண முடியா பெருந்தழலாக தோன்றிய சிவபெருமானின் தன்மைகளைக் கூறுகிறார்.

### திருவம்மானை

பெண்கள் சிறிய உருண்டைக் கற்களை சேகரித்துக் கொண்டு ஒரு கல்லை மேலே தூக்கிப்போட்டு அக்கல் கீழே விழுவதற்குள் தரையில் தட்டி அக்கல்லைப் பிடிப்பர். இதில் கல்லை மேலே தூக்கியெறிந்து விளையாடும் பெண் கேள்வி கேட்க மற்றொரு பெண் பதிலளிக்க வேண்டும். இவ்விளையாட்டின் சிறப்பம்சம் ஒருவருக்கொருவர் கவனத்தோடு விளையாடுவதேயாகும்.

**"கேட்டாயோ தோழி கிறி
செய்தவாறொருவன்
திட்டார்மதில்புடைசூழ் தென்னன்
பெருந்துறையான்
காட்டாதனவெல்லாங் காட்டிச்
சிவங்காட்டித்
"தாள்தாமரைக்காட்டித் தன்கருணைத்
தேன் காட்டி
நாட்டார்நகைசெய்ய நாம்மேலை
வீடெய்த
ஆள்தான் கொண்டாண்டவா
பாடுதுங்காண் அம்மானய்"**

**(திருவம்மானை-6)**

என்று பாடுகின்றனர்.

மகளிர் இவ்விளையாட்டில் பொன்னாலான கழங்கினை வைத்தும் விளையாடியுள்ளனர்.

"மகளிர் முத்தவார்மணல் பொற்கழங்காடும்" (புறம்)

### திருப்பொற் சுண்ணம்

மகளிர் சுண்ணப்பொடி இடிக்கும் போது பாடிக் கொண்டே செய்யும் விளையாட்டு.

இதில் இறைவனுக்கு பூசப்படும் சுண்ணப் பொடி இடிக்கும் மகளிர்பக்தி பாடல்களைப் பாடிக்கொண்டே இடிப்பர்.

**"தேசமெல்லாம் புகழ்ந்தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பெற் கோயில்பாடி
பாசவினைகள் பறித்துநின்று"**

**(திருப்பொற்சுண்ணம் -4)**

பாசவினைகள் அறுபட செய்ய வேண்டியவற்றை சுண்ணப் பொடிகள் இடித்தவாறு மகளிர்பாடுகின்றனர்.

**ஊசலாட்டம்**

அக்காலத்தில் பெரும்பாலும் பெண்கள் மரக்கிளையில் கயிற்றினைக் கட்டி ஊஞ்சலாடுவர். அப்போது அவர்கள் பாடும் பாட்டு ஊசல் வரி எனப்பட்டது.

**பெருங்கயிறு நாலும்**
**இரும் பனம் பிணைய என்று குறிஞ்சிக் கலி குறிப்பிடுகிறது.**
**இவ்விளையாட்டினை மாணிக்கவாகர் திருப் பொண்ணூசல் என்று குறிப்பிடுகிறார்.**
**"மாதாடுபாகத்தன்**
**உத்தரகோசமங்கை"**

**(திருப்பொண்ணூசல்–6)**

பெண்ணை ஒரு பாகம் கொண்டவனின் அருள் தாளினைப் பாடுவோம் என ஊஞ்சலாடி மகிழ்கின்றனர்

**திருவாசகத்தில் அறம்**

வாய்மையைக் கடைப்பிடித்தலே சிறந்த அறம் எனும் திருவெம்பாவை பாடல்கள் யாரையும் பக்தியில் ஈர்க்கும் தன்மைக் கொண்டது. பொய் பேசுபவர் மனதில் இறைவன் புகமாட்டார் என்று கூறும் நோக்கில், உறக்கத்தை விட்டு எழுந்த பெண்கள் உறங்கிக் கொண்டிருக்கும் பெண்களை எழுப்புகின்றனர். ஆன்மீக வழி, மாந்தருக்குள் இருக்கின்ற ஒன்பது வகையான சக்திகளை எழுப்பும் விதமாக பெண்கள் பாடியிருப்புது, பெண்களின் மூலம் புதியதோர்ஆன்மீக உலக உருவாக்கத் தினைக் காணமுடிகிறது. பிறரும் பயன் பெற்று உய்ய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தை,

**"மாதே வளருதியோவன் செவியோ**
**நின்செவிதான்"**

**(திருவெம்பாவை–1)**

சிவபெருமானின் திருவடிகளைச் சேரகருதும் பெண் அரசவண்டிடம்,

**மாஏறு சோதியும் வானவரும் தாம அறியாச்**
**சேஏறு சேவடிக்கே சென்று ஊதாய், கோத்தும்பீ**

இறைவன் மீது தீராத பக்தி கொண்ட பெண் சோலையில் பறந்து திரியும் அரசவண்டிடம், யாராலும் அறிய இயலாதவன் காளைவாகனத்தில் ஏறுகின்ற சிவபெருமானின் திருவடிகளில் சென்று அரீங்காரம் செய் பக்தர்களின் மனதை இறைவன் பால் வழி மடுத்து அனுப்புகிறார். இங்கு நாயகியாகிய மாணிக்கவாசகர். மேலும் திருவடிப்பெருமையை,

அல்லி மலர்களைக் கொண்டு விளையாடும் பெண்கள், சிவபெருமான் மூன்று கோட்டைகளை நகை செய்து அழித்தவன். ஒவ்வொருக்குள்ளும் செயல்படும் முப்புரங்கான ஆணவம், கன்மம், மாயையைகளை அழிப்பவன், அவனை பற்று மின்கள் என்று சுய சிந்திக்க வைக்கும் ஆற்றலாக,

**வளைந்தது வில்லு விளைந்தது புசல்**
**ஊளைந்தன முப்புரம் உந்தீபற**
**ஒருங்குடன் வெந்தவாறுந்தீ பற**

**(திருவுந்தியார் 1)**

ஒரு பெண் சொல்லிக் கொண்டே உந்தீபற என்கிறாள். மற்றொருத்தி மூன்று கோட்டைகளும் ஒரே நேரத்தில் பற்றி எரிந்தன என்கிறாள்.

**"அனையார்புனற்றில்லைஅம்பலத்தே ஆடுகின்ற" (திருப்பூவல்லி 1)**

சிவபெருமான் தன் திருவடிகளை பக்தனின் தலைமேல் வைத்தவுடன் அவனை சூழ்ந்துள்ள உலகப் பற்றுகள் அனைத்தும் நீங்கிவிடும் என்ற உட்கருத்தை மகளிர் விளையாட்டின் மூலம் உணர்த்துகிறார் மாணிக்கவாசகர்.

திருவாசகம் சைவசமய ஆன்மீக கருத்தை விளங்குவதோடு மட்டுமல்லாமல் ஆன்மீகத்தில் மகளிருக்கான சிறப்பையும் பெருமையையும் உயர்த்திக் காட்டுகிறது.

**பார்வை நூல்கள்**


1. தொல்காப்பியம்
2. திருவாசகம்
3. குறிஞ்சிக் கலி